திருச்செந்தூரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதியில் குடில்கள் கட்டுவதற்கு ரூ.28.28 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன. திருச்செந்தூரில் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி செய்தல் திட்டத்திற்கு ரூ.23 இலட்சம் நிதி ஒப்பளிப்பு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்துள்ளார்கள். நவீனக் கழிப்பிடம் கட்ட திருச்செந்தூர் கோவில் நிலம் ஒதுக்கியுள்ளது. பணிகள் பொதுப் பணித் துறை மூலம் துவங்க உள்ளது. தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சி கட்ட பொம்மன் நினைவு கோட்டை தொடர்பாக சுற்றுலா விளம்பர மடிப்பேடும் சுற்றுலாத் துறையின் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக வெளியிடப்பட்டுள்ளது. நவதிருப்பதி ஆலய இடங்களில் ரூபாய் 18.75 இலட்சம் மதிப்பீட்டில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் திட்டம், தெய்வசெயல்புரத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ரூ.19 இலட்சத்தில் ஏற்படுத்தவும், காயல்பட்டினம் கடற்கரையில் ரூ.30 இலட்சத்திற்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.எஸ். கண்ணன்.

திரு. ஏ.எஸ். கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதியிலுள்ள பழவேற்காடு பறவைகள் சரணாலயம்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 27, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

27—

புதிய அலுவலகக் கட்டடம்

***19413—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 பிப்ரவரி 10

ஈரோட்டில் உள்ள கோட்டாட்சியர் மற்றும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் புதிய அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு தொகுதியிலுள்ள கோட்டாட்சியர் அலுவலகம் 1881 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 123 ஆண்டுகள் ஆகிறது. அதேபோல வட்டாட்சியர் அலுவலகம் 2-5-1890-ல் கட்டப்பட்டது. 114 ஆண்டுகள் ஆகிறது. இரண்டு கட்டடங்களும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. வட்டாட்சியர் அலுவலகத்தில் மழைக் காலங்களில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கெல்லாம் புதிய அழகிய கட்டடங்களைக் கட்டிக் கொடுத்ததைப்போல, ஈரோட்டில், கோட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள சுமார் 2 ஏக்கர் நிலப்பரப்பில் வட்டாட்சியர் அலுவலகமும் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகம் ஆகிய இரண்டையும் ஒரே இடத்தில் அடுத்த நிதியாண்டிலாவது கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு முன் வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் உள்ள 73 வருவாய்க் கோட்ட அலுவலகங்களில் ஆத்தூர் வருவாய்க் கோட்ட அலுவலகம் தவிர, ஏனைய 72 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ஆத்தூர் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. ஈரோட்டில் கோட்டாட்சியர் அலுவலகம் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு புதிதாகக் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் தற்போதில்லை. ஆண்டுதோறும் பழுதுபார்ப்பதற்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து பழுதுபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2004 பிப்ரவரி 10]

வட்டாட்சியர் அலுவலகங்களைப் பொறுத்தவரையில், மாநிலத்தில் மொத்தம் உள்ள 206 வட்டாட்சியர் அலுவலகங்களில், 182 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. II-வது நிதிக் குழுவின் மானியத்திலிருந்து கீழ்க்கண்ட 6 வட்டாட்சியர் அலுவலகங்கள், வரும் மூன்று ஆண்டுகளில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் தேனி மற்றும் போடிநாயக்கனூரிலும், கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரத்திலும், பெரம்பலூர் மாவட்டத்தில் வேப்பந்தட்டையிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் பூந்தமல்லி மற்றும் பள்ளிப்பட்டிலும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், வானூர், திருக்கோயிலூர், திண்டிவனம் ஆகிய வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடங்கள் II-வது நிதிக் குழுவின் மானியத்திலிருந்து கட்ட உத்தேசிக்கப்பட்டு உள்ளது. மீதம் உள்ள 18 வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டும் பணி வருங்காலத்தில் படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் கட்டடம் கட்டிய பின்னரே பழுதடைந்துள்ள பழைய அரசு கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடம் கட்டுவது குறித்து அரசு பரிசீலிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

28—

தடுப்புச் சுவர் அமைத்தல்

***35197—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டம், குன்னூர்-ஊட்டி நெடுஞ்சாலையில் பாய்ஸ் கம்பெனி எதிரே தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY